செ.வெ.எண்:16 நாள்:11.03.2017

# அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக் கூட்டரங்கில் மாவட்ட அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (11.03.2017) நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் சீமைகருவேலி மரங்கள் அகற்றும் பணிகள் மற்றும் குடிநீர் விநியோகம் குறித்து வருவாய்துறை, வளர்ச்சித்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, சுரங்கத்துறை, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் சார்ந்த அலுவலர்கள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (11.03.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தாவது:-

இக்கூட்டத்தில் சீமைக்கருவேலி மரங்கள் அகற்றும் பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைத்து அரியலூர் மற்றும் திருமானூர் ஒன்றியங்களுக்குட்பட்ட கருப்பூர்சேனாதிபதி, அருங்கால், ரெட்டிபாளையம், வாரணவாசி ஆகிய ஊராட்சிகளிலும், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் மற்றும் தா.பழூர் ஒன்றியங்களுக்குட்பட்ட ஸ்ரீபுரந்தான், பழூர், ஜெ.தத்தனூர், குவாகம், கூவத்தூர், சூரியமணல் ஆகிய ஊராட்சிகளிலும், செந்துறை ஒன்றியத்திற்குட்பட்ட பொன்பரப்பி, பிலாக்குறிச்சி, கிளிமங்கலம் ஆகிய ஊராட்சிகளிலும் உள்ள வருவாய்துறை, வளர்ச்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை ஆகிய துறைகளின் கட்டுப்பட்டில் உள்ள நிலங்களில் சீமைக்கருவேலி மரங்களை **13.03.2017 முதல் 17.03.2017-க்குள்** அகற்ற அவரவர் பணிகளை துரிதமாக மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும், அனைத்துத்துறை அலுவலர்களும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீர் வழங்கப்படுவதை குறித்தும், புதிய ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க வழங்கப்பட்ட பணிகள் குறித்தும், பழைய ஆழ்குழாய் கிணறுகளை மறுசீரமைப்பு பணிகளை விரைந்து செயல்படுத்திட உத்தரவிடப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.தனசேகரன், வருவாய்துறை, வளர்ச்சித்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, சுரங்கத்துறை, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.